# பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

## வலு

முன்னைய ஆண்டில் அடைந்த பின்னடைவையடுத்து 1993 இல் வலு நிலைமையில் கணிசமான முன்னேற்றங்காணப்பட்டது. 1992 இல், குறிப்பாக ஆண்டின் முதல் அரைப்பகுதியில் கடும் வரட்சி நிலைமைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நீர் மின்வலு உருவாக்கம் 1993 இல் சாதகமான வானிலை நிலைமைகளைத்தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. இதன்விளைவாக இவ்வாண்டில் இலங்கை மின்சபை வெப்பமின் வலுவில் தங்கியிருப்பதனை மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைத்துக் கொண்டது. 1993 யூலையில் மின் விலைகள் அதிகரித்த போதிலும் அதற்கான கேள்வி கணிசமாக அதிகரித்திருந்தது. இவ்வேளையில் வெப்பமின்வலு உருவாக்கத்துக்கு பாரடீசலும், உலையெண்ணெயும் வெகுகுறைவாகவே பயன்படுத்தப்பட்டதன் விளைவாக பெற்றோலிய உற்பத்திகளுக்கான மொத்தக் கேள்வியும் சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. ஆயினும் விலை அதிகரிப்புக்களின் மத்தியிலும் பெற்றோல், தன்னியக்க டீசல் போன்ற முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டுப் பாவனை தொடர்ந்து விரிவடைந்தது.

வழக்கமான போக்கிற்கேற்ப, விறகு, மரத்தின் உட்கூறுகள், வேளாண்மை எச்சங்கள், விலங்குக் கழிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வர்த்தகமல்லா வலு மூலங்கள் முக்கிய வலு மூலங்களாகத் தொடர்ந்து விளங்கி, நாட்டின் மொத்த வலு (73 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமனான) வழங்கலில் 68 சதவீதத்தை அல்லது 50 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமான தொகையைப் பிரதிபலித்தன. எஞ்சிய 32 சதவீதத்திற்குப் பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோலிய வாயு என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தக வலு மூலங்கள் வகைகூறின.

1993 இல் 1,409 மெகாவாட்டாக விளங்கிய மின்வலுவின் மொத்த நிறுவப்பட்ட இயலளவில் நீர் மின்வலு 1,137 மெகாவாட்டாகவும் வெப்ப மின்வலு 272 மெகாவாட்டாகவும் அமைந்திருந்ததுடன் 1992 உடன் ஒப்பிடுகையில் அது மாற்றமின்றி இருந்தது. இலங்கை மின்சபையால் உருவாக்கப்பட்ட மொத்த மின்வலு 3,979 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி, முன்னைய ஆண்டின் 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீதமான, கணிசமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. 1993 உடன் முடிவடைந்த பத்தாண்டுக் காலத்தில் அடைந்த மின்வலு உருவாக்கத்தில் இதுவே ஆகக்கூடிய ஆண்டு வளர்ச்சியாக இருந்தது. 1993 இல் 3,796 கிகாவாட் மணித்தியாலங்களாக இருந்த நீர்மின்வலு உருவாக்கம், முன்னைய ஆண்டின் 7 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 31 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்புக்கு நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் உயர்வடைந்தமையே முழுக் காரணமாகும். இதன் விளைவாக வெப்ப மின்வலு உருவாக்கம் 1992 இன் 640 கிகாவாட் மணித்தியாலங்களிலிருந்து 1993 இல் 183 கிகாவாட் மணித்தியாலங்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியுற்றதன் விளைவாக, வலு உருவாக்கத்தின் மீதான எரிபொருட்செலவு 1992 இன் ரூ. 16,580 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 3,470 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இவ்வேளையில் வலு உருவாக்கத்திலும், கடத்தலிலும்,

அட்டவணை 1.27

## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1992 - 1993

| விடயம் | அலகு | 1992 | 1991 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1993* | 1992 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. பெற்றோலிய உற்பத்திகள் | | | | | |
| 1.1 ஏற்றுமதிகளின் அளவு ... | மெ. தொ. | 410,164 | -21.6 | 598,929 | 46.0 |
| 1.2 ஏற்றுமதிகளின் பெறுமதி ... | ரூ. ப. இ. | 2,770.6 | -15.8 | 3,801.0 | 37.2 |
| ... | சிஎஉ. ப. இ. | 44.9 | -22.7 | 56.4 | 25.6 |
| 1.3 இறக்குமதிகளின் அளவு | | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | மெ. தொ. | 1,296,518 | -20.2 | 1,790,575 | 38.1 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ,, | 661,513 | 202.7 | 313,463 | -52.6 |
| 1.3.3 திரவப் பெற்றோலிய வாயு ... | ,, | 31,382 | 71.4 | 37,584 | 19.8 |
| 1.4 இறக்குமதிகளின் பெறுமதி (கொ. கா) | | | | | |
| 1.4.1 மசகெண்ணெய் ... | ரூ. ப. இ. | 7,666.70 | -20.7 | 11,056.69 | 44.2 |
| ... | சிஎஉ/ப.இ | 124.16 | -27.3 | 164.07 | 32.1 |
| 1.4.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ. ப. இ. | 5,526.41 | 115.3 | 2,430.85 | -56.0 |
| ... | சிஎஉ. ப. இ. | 89.50 | 97.4 | 36.07 | -59.7 |
| 1.4.3 திரவப் பெற்றோலிய வாயு ... | ரூ. ப. இ. | 495.30 | 106.9 | 540.50 | 9.1 |
| ... | சிஎஉ. ப.இ. | 8.02 | 89.6 | 8.02 | - |
| 1.5 மசகெண்ணெயின் சராசரி விலை (கொ. கா) ... | ரூ.பீப்பா | 803.00 | -0.5 | 834.45 | 3.9 |
| ... | ஐ.அ.டொ/பீப் | 18.32 | -6.0 | 17.29 | -5.6 |
| 1.6 உள்நாட்டு விற்பனைகள் ... | மெ. தொ. | 1,486,844 | 19.9 | 1,417,485 | -4.7 |
| 1.6.1 சிறப்புப் பெற்றோல் ... | ,, | 164,875 | 3.2 | 172,812 | 4.8 |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | ,, | 606,527 | 12.3 | 666,513 | 9.9 |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 125,274 | 285.1 | 18,020 | -85.6 |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 22,722 | 13.7 | 23,216 | 2.2 |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | ,, | 189,363 | 9.2 | 191,629 | 1.2 |
| 1.6.6 உலை எண்ணெய் ... | ,, | 251,689 | 23.2 | 219,918 | -12.6 |
| 1.6.7 அவுட்டூர் ... | ,, | 81,513 | 12.1 | 72,563 | -11.0 |
| 1.6.8 ஏவி வாயு ... | ,, | 188 | -10.9 | 164 | -12.8 |
| 1.6.9 திரவப் பெற்றோலிய வாயு ... | ,, | 44,693 | 19.1 | 52,650 | 17.8 |
| 1.7 உள்நாட்டு விலை | | | | | |
| 1.7.1 சிறப்புப் பெற்றோல் ... | ரூ/லீற்றர் | 33.00 | 10.0 | 35.00 | 6.1 |
| 1.7.2 தன்னியக்க டீசல் ... | ,, | 11.65 | 5.9 | 12.20 | 4.7 |
| 1.7.3 பார டீசல் ... | ,, | 11.15 | 5.2 | 11.60 | 4.0 |
| 1.7.4 சிறப்பு டீசல் ... | ,, | 14.55 | 11.9 | 15.00 | 3.1 |
| 1.7.5 மண்ணெண்ணெய் ... | ,, | 8.80 | 0.0 | 11.80 | 34.1 |
| 1.7.6 உலை எண்ணெய் ... | ,, | | | | |
| 500 செக்கண்ட் ... | ,, | 7.10 | 9.5 | 7.10 | - |
| 800 செக்கண்ட் ... | ,, | 6.80 | 8.8 | 6.80 | - |
| 1000 செக்கண்ட் ... | ,, | 6.50 | 9.2 | 6.50 | - |
| 1.7.7 நிலக்கீல் ... | ,, | 15.15 | 39.0 | 15.15 | - |
| 1.7.8 திரவப் பெற்றோலிய வாயு ... | ரூ. கி. கி. | 16.54 | 0.0 | 20.00 | 20.9 |
| 2. மின் வலு | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,409.65 | 9.3 | 1,409.65 | - |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 1,137.45 | 11.8 | 1,137.45 | - |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 272.20 | - | 272.20 | - |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் ... | கி. வா. ம. | 3,539.9 | 4.8 | 3,979.0 | 12.4 |
| 2.2.1 நீர் மின் ... | ,, | 2,900.1 | -6.9 | 3,796.0 | 30.9 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 639.8 | 145.7 | 183.0 | -71.4 |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | கி. வா. ம. | 2,916.3 | 6.3 | 3,275.0 | 12.3 |
| 2.3.1 வீடு ... | ,, | 704.4 | 9.4 | 782.0 | 11.0 |
| 2.3.2 கைத்தொழில் ... | ,, | 1,057.7 | 10.4 | 1,183.0 | 11.8 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 580.8 | 6.1 | 655.0 | 12.8 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 544.6 | -4.7 | 622.0 | 14.2 |
| 2.3.5 தெரு விளக்குகள் .. | ,, | 28.8 | 34.0 | 33.0 | 14.6 |

* தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மின்சபை,
வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கம்பனி.

வழுங்கலிலும் ஏற்பட்ட இழப்புக்கள் முன்னைய ஆண்டினைப்போன்று 17.7 சதவீதமான உயர்மட்டத்தில் இருந்தன.

1993 யூலையில் மின் தீர்வைகள் இலங்கை மின்சபையால் திருத்தி அமைக்கப்பட்டன. இத் தீர்வைத் திருத்தம் சராசரி தேறிய நிலையான சொத்துக்களிலிருந்து 8 சதவீத வருவாய் வீத மொன்றை அடைதல், படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் 1.5 மடங்குக்குக் குறையாத அளவில் உள்ளகக் காசு உருவாக்கம் ஒன்றைப் பேணுதல், மூலதன முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையானநிதிகளில் நியாயமான ஒருவிகிதசமத்தை உள்ளகக் காசிலிருந்து உருவாக்குதல் என்பனவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது. வீட்டு வகையைப் பொறுத்தமட்டில் நுகர்வு மட்டத்தைப் பொறுத்து 9 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரையான வீச்சில் விலை அதிகரிப்பு இருந்தது. ஏனைய வகைகளின் விடயத்தில், தீர்வைகள் ஏறத்தாழ 30 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. இதேவேளையில், வலு உருவாக்கத்தின் மீதான எரிபொருட் செலவை மீளப்பெறுவதற்காக 1992 மாச்சில் விதிக்கப்பட்ட எரிபொருள் மேலதிகக் கட்டணம் 20 சதவீதமான ஒரு குறைக்கப்பட்ட வீதத்திலே 1993 முழுவதும் தொடர்ந்து இருந்தது. திருத்தியமைக்கப்பட்ட மின் கட்டண வீதங்கள் முன்னைய ஆண்டின் வீதங்களுடன் அட்டவணை 1.28 இல் தரப்பட்டுள்ளன.

மின் விலைகள் அதிகரித்தபோதிலும், 1993 இல் மின் விற்பனைகள் 12 சதவீதத்தால் அதிகரித்து 3,275 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி, கடந்த 10 ஆண்டுக் காலத்தில் ஆகக்கூடிய அதிகரிப்பைப் பதிவு செய்தன. மின் விற்பனை அதிகரிப்புக்கு 1993 இன் இறுதியில் மின் பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கை 207,397 ஆல் 1,282,394 இற்கு அதிகரித்தமையே ஓரளவு காரணமாகும். வீட்டு வகைக்கான விற்பனைகள் 11 சதவீதத்தால் 782 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்து கிராமிய மின்மயப்படுத்தும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் வீட்டுப்பாவனையாளர்களின் எண்ணிக்கை 1992 இல் 917,319 ஆக இருந்து 1993 இல் 1,094,371 இற்கு அதிகரித்தமையைப் பெருமளவில் பிரதிபலித்தது. 1993 செத்தெம்பர் இறுதியளவில் 15,831 கிராமிய மின் மயப்படுத்தும் திட்டங்களை இலங்கை மின்சபை நிறைவேற்றியிருந்தது. இவ்வேளையில் கைத்தொழில், வர்த்தகத்துறைகளுக்கான விற்பனைகள் முறையே 12 சதவீதத்தாலும் 13 சதவீதத்தாலும் அதிகரித்து, ஆய்வுக்குரிய ஆண்டில் கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகள் மேம்பட்டு விளங்கியமையைப் பிரதிபலித்தன. 1993 இல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகை விற்பனைகளும் 14 சதவீதத்தால் அதிகரித்தன.

மின் உட்கட்டமைப்பை விரிவாக்கும், தரமுயர்த்தும், மறுசீரமைக்கும் நோக்குடன் 1993 இல் இலங்கை மின்சபை பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ரூ. 27,310 இலட்சம் கொண்ட தொகையை முதலீடு செய்தது. மொத்த முதலீடுகளில் ஏறத்தாழ காற்பங்கு (ரூ. 7,090 இலட்சம்) கடல்கடந்த பொருளாதாரக் கூட்டுத்தாபன நிதியத்தினால் கடத்தல் முறையை விரிவுபடுத்தும் செயற்றிட்டத்திற்கு நிதியிடப்பட்டவேளையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு அல்லது ரூ. 5,160 இலட்சம் புதிய கிராமிய மின்மயப்படுத்தும் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட ஏனைய பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களாவன: நடுத்தர, தாழ்ந்த வோல்ற் அளவு அபிவிருத்திச் செயற்றிட்டம் (ரூ. 5,390 இலட்சம்), பத்தாவது வலுச் செயற்றிட்டம் (ரூ. 2,220 இலட்சம்),

இரண்டாவது வலு வழங்கல் கடத்தல் செயற்றிட்டம் (ரூ. 1,080 இலட்சம்), இரண்டாந்தர நகர வலு வழங்கல் செயற்றிட்டம் (ரூ. 820 இலட்சம்) என்பனவாம்.

ஆய்வுக்குரிய ஆண்டில் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 7 சதவீதத்தால் ரூ. 149,200 இலட்சத்துக்கு அதிகரித்தது. ஒரு பீப்பாய் மசகெண்ணெயின் சராசரி பன்னாட்டு விலை 1992 இல் ஐ. அ. டொலர் 18.3 ஆகவிருந்து 1993 இல் ஐ.அ. டொலர் 17.3 இற்கு மேலும் வீழ்ச்சியுற்றது. எண்ணெய்த் தூய்மி இடையூறின்றித் தொழிற்பட்டதன் காரணமாக 1992 இல் 1,296,518 மெற்றிக் தொன்களாக இருந்த மசகெண்ணெய் இறக்குமதிகளின் அளவு 38 சதவீதத்தால் 1,790,575 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக 1993 இல் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதி 53 சதவீதத்தால் 313,463 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. இவ்வாண்டில் கொழும்பு வாயு கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுவின் அளவு 6,202 மெற்றிக் தொன்களால் 37,584 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து அவ்விறக்குமதிகளின் பெறுமதியையும் ரூ. 5,410 இலட்சத்திற்கு 9 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது.

1993 இல் உலையெண்ணெய் நீங்கலாக, ஏனைய முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் மேல்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டன. 1990 தொடக்கம் மாற்றமடையாதிருந்த மண்ணெண்ணெயின் விலை லீற்றர் ஒன்று 3 ரூபாவால் (34 சதவீதம்) லீற்றர் ஒன்று ரூ. 11.80 இற்கு அதிகரிக்கப்பட்டது. 1993 இல் டீசலின் விலை ஒரு லீற்றர் ரூ. 11.65 தொடக்கம் ரூ. 12.20 வரையும் படிப்படியாக 5 தடவைகளில் திருத்தியமைக்கப்பட்டது. 1993 இல் பெற்றோலின் விலையும் லீற்றர் ஒன்று ரூ.2 இனால் லீற்றர் ஒன்று ரூ. 35 இற்கு அதிகரித்தது.

ஆய்வுக்குரிய ஆண்டில், பெற்றோலிய உற்பத்திகளின் மொத்த உள்நாட்டு நுகர்வு 1,417,485 மெற்றிக் தொன்களாக இருந்து, முன்னைய ஆண்டின் 20 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. நுகர்வு வீழ்ச்சியடைந்தமைக்கு வெப்ப மின்வலு உருவாக்கத்துக்கான பாரடீசலினதும் உலையெண்ணெயினதும் பாவனை குறைந்தமையே பெருமளவு காரணமாகும். 1992 இற்கும் 1993 இற்கும் இடையே பாரடீசலுக்கான கேள்வி 107,254 மெற்றிக் தொன்களால் 18,020 மெற்றிக் தொன்களுக்குப் பெருமளவு வீழ்ச்சியடைந்தவிடத்து, உலையெண்ணெய்க்கான கேள்வி 31,771 மெற்றிக் தொன்களால் 219,918 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. இதற்கு மாறாக இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே விலைகள் அதிகரித்தவிடத்தும், பெற்றோலினதும் டீசலினதும் விற்பனைகள் முறையே 5 சதவீதத்தாலும் 10 சதவீதத்தாலும் அதிகரித்தன. மண்ணெண்ணெயின் நுகர்வை 1992 இன் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் சிறிதளவு அதிகரித்து விலை அதிகரிப்பின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. 1993 இல் விலை அதிகரித்தபோதிலும் திரவப் பெற்றோலிய வாயு விற்பனைகள் 18 சதவீதத்தால் 52,650 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக அதிகரித்து, சமையல் நோக்கங்களுக்கான வாயுவின் கேள்வி அதிகரித்திருந்ததைப் பிரதிபலித்தன.

ஆய்வுக்குரிய ஆண்டில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் தனியார் மயப்படுத்தப்பட்டன. 1987 இன் 23 ஆம் இலக்க மக்கள்மயப்படுத்தும் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட

*அட்டவணை 1.28*

**திருத்தியமைக்கப்பட்ட மின் வீதங்கள்**

| வகை | | முன்னைய வீதம் (ரூ./கி.வா.ம.) | திருத்தியமைக்கப் பட்ட வீதம் (ரூ./கி.வா.ம.) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. வீட்டு நோக்கங்கள் | | | | |
| அலகுகள் 0 - 10 | ... | 0.55 | 0.60 | 9.09 |
| 11 - 50 | ... | 1.05 | 1.20 | 14.29 |
| 51 - 100 | ... | 2.00 | 5.20 | 30.00 |
| 101 - 450 | ... | 3.00 | 3.90 | 30.00 |
| > 450 | ... | 4.00 | 5.20 | 30.00 |
| 2. மத நிறுவனங்கள் | | | | |
| அலகுகள் 0 - 150 | ... | 0.80 | 1.05 | 31.25 |
| > 150 | ... | 2.95 | 3.85 | 30.51 |
| 3. கைத்தொழில் நடவடிக்கைகள் | | | | |
| சிறிய | ... | 2.35 | 3.05 | 29.79 |
| நடுத்தர | ... | 2.20 | 2.90 | 31.82 |
| பாரிய | ... | 2.15 | 2.80 | 30.23 |
| 4. பொது நோக்கங்கள் | | | | |
| சிறிய | ... | 3,10 | 4,05 | 30,65 |
| நடுத்தர | ... | 3,05 | 4,00 | 31.15 |
| பாரிய | ... | 2.95 | 3,85 | 30.51 |
| 5. உணவகங்கள் | | | | |
| சிறிய | ... | 3,10 | 4.05 | 30,65 |
| நடுத்தர | ... | 3,05 | 4,00 | 31.15 |
| பாரிய | ... | 2,95 | 3,85 | 30.51 |

மூலம் : இலங்கை மின் சபை.

குறிப்பு :

சிறிய : மின்வலுவின் வழங்கல் 400 / 230 வோல்ட்டுக்களும் ஒப்பந்தக் கேள்வி 50 கிவாஅ இற்குக் குறைவானதும்.

நடுத்தர : மின் வலுவின் வழங்கல் 400 / 230 வோல்ட்டுக்களும். ஒப்பந்தக் கேள்வி 50 கிவாஅ இற்குச் சமமானதும் அல்லது அதற்குக் கூடுதலானதும்.

பாரிய : மின்வலு வழங்கல் 11 கிவா, 33 கிவா, 132 கிவா நாளின் நேரத்தோடொத்த தீர்வை கைத்தொழில் மற்றும் உணவக வகைகளுக்கு மட்டுமே பொருந்தும். உச்ச நேர வீதங்களும் உச்சமற்ற நேர வீதங்களும் 30-31 சதவீதத்தால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

லங்கா லுப்றிகன்ஸ் என்று அழைக்கப்படும் பொதுக் கம்பனிக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உராய்வுநீக்கி, கலத்தல், சந்தைப்படுத்தல் ஆகிய கூறுகள் மாற்றப்பட்டன. 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நடவடிக்கை வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் (பிரைவேற்) என்ற பெயருடைய பிறிதொரு தனியார் கம்பனிக்கு மாற்றப்பட்டது.

## போக்குவரத்து

முன்னைய ஆண்டினைப்போன்று 1993 இல் போக்குவரத்துத் துறைத் தொழிற்பாடுகள் கலப்புடைய செயலாற்றத்தைப் பதிவு செய்தன. தொழிற்படும் அளவு நியதிகளில், இவ்வாண்டில் மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளும் தனியார்துறைப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளும் மேலும் விரிவடைந்தன.

ஆயினும் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாடுகள் ஏறத்தாழ மாற்றமின்றியிருந்தன.

1993 இல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைகள் 1990 இல் தொடங்கப்பட்ட பேருந்துச்சாலைகளையும் தொழிற்கூடங்களையும் மக்கள் மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தையே பெரும்பாலும் மையமாகக் கொண்டிருந்தன. 1993 இன் இறுதியில் மொத்தமாக 92 பேருந்துக் கம்பனிகள் நிறுவப்பட்டு, வேரகெரத் தொழிற்தொகுதி உட்பட 5 தொழிற்கூடங்களும் மக்கள்மயப்படுத்தப்பட்டன. இதேவேளை, தொழிற்பட்ட பேருந்துத் தொகுதியைப் புனரமைப்புச் செய்தும் புதிய பேருந்துகளைக் கொள்வனவு செய்தும் தமது பேருந்துத் தொகுதியை வலுப்படுத்துவதற்கு மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளால் முயற்சிகள் எடுக்கப்பட்டன. மக்கள்மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் தொடங்கிய 1990 ஆம் ஆண்டிலிருந்து 1993 இல் சேர்க்கப்பட்ட எண்ணிக்கையான 325 உடன் 1993 இன் இறுதிவரையில் மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளால் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துத் தொகுதியில் மொத்தமாக 750 புதிய பேருந்துகள் சேர்க்கப்பட்டன. பேருந்துத் தொகுதி அதிகரிக்கப்பட்டதன் விளைவாக மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளால் நாளாந்தம் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 1992 இன் 3,550 இலிருந்து 1993 இல் 3,750 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் தொழிற்பட்ட கிலோமீற்றரளவு 2,780 இலட்சமாக இருந்து முன்னைய ஆண்டின் அளவினைவிட 4 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையேயும் பயணிகள் கிலோ மீற்றரளவு 134,550 இலட்சமாயிருந்து 5 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வபிவிருத்திகள் காரணமாக 1993 இல் மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் மொத்த வருவாய் ரூ. 30,230 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் வருவாயைவிடப் 10 சதவீதத்தால் அதிகரித்தது.

ஆய்வுக்குரிய ஆண்டில், இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு அளவு தொழிற்பட்ட கிலோமீற்றரளவு நியதிகளில் முன்னைய ஆண்டின் மட்டமான 81 இலட்சத்திலேயே இருந்தவிடத்து, சரக்குத் தொன் கிலோ மீற்றரளவால் எடுத்துக்காட்டப்பட்டவாறு சரக்குப் போக்குவரத்து அளவு 1,675 இலட்சத்துக்கு 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு அளவு, வட்டவலவில் வண்டிப் பாதை புதையுண்டதன் விளைவாக பிரதான பாதையில் வண்டிப்பணிகள் தடைப்பட்டமையால் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருந்தது. இத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான வழமையான வண்டிப்பணிகளும், அவ்விரு மாகாணங்களிலிருந்த பாதகமான பாதுகாப்பு நிலைமை காரணமாக 1993 இல் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டன. ஆயினும், தொழிற்பாட்டு அளவில் இக்காரணிகள் ஏற்படுத்திய பாதகமான தாக்கமானது கோட்டைக்கும் நீர்கொழும்புக்குமிடையே வழமையான சேவையில் வண்டிகளை அதிகரித்தமை, அகலமாக்கப்பட்ட களனிப் பள்ளத்தாக்குப் பாதையை நுகேகொடையிலிருந்து கோமகமவுக்கு நீடித்தமை, அநுராதபுரத்திலிருந்து மிகிந்தலைக்குப் புதிய புகைவண்டிப் பாதையை அறிமுகப்படுத்தியமை என்பனவற்றின் மூலம் ஓரளவு குறைக்கப்பட்டது. இவற்றுடன், பயணிகளுக்கு வசதிமிக்க வண்டிகளை அறிமுகப்படுத்தியமை, புது டீசல் எந்திரங்களுடன் எஸ் 6 வகுப்பு வலு வண்டிகளை மீளப்பொருத்தியமை, அநுராதபுரத்திலும், கண்டியிலுமிருந்து மாத்தறைக்குக் கொழும்பினூடாகச் செல்லும்

அட்டவணை 1.29

**போக்குவரத்துத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1992 - 1993**

| விடயம் | அலகு | 1992 | 1991 இற்கு மேலாக சதவீத மாற்ம் | 1993* | 1992 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | |
| 1.1 தனியார் பயணி வண்டிகள்** .. | எண்ணிக்கைகள் | 2,479 | -27.0 | 1,835 | -26.0 |
| 1.2 தனியார் ஊர்திகள்*** .. | .. | 20,177 | 33.8 | 16,802 | -16.7 |
| 1.3 உந்து ஈருருளிகள் .. | ,, | 65,834 | 12.3 | 53,934 | -18.1 |
| 1.4 சரக்குகள் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் .. | ,, | 4,146 | 29.6 | 4,948 | 19.3 |
| 1.5 நில ஊர்திகள் .. | ,, | 5,487 | 37.1 | 6,647 | 21.1 |
| 1.6 ஏனையவைகள் .. | ,, | 134 | 76.3 | 8 | -94.0 |
| 1.7 தனியார் சொகுசு வண்டிகள் .. | ,, | 425 | 56.3 | 295 | -30.6 |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் .. | ப. இ. | 8.1 | 6.6 | 8.1 | - |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் .. | ,, | 2,613.4 | -1.5 | 2,810.3 | 7.5 |
| 2.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் .. | ,, | 177.0 | 4.7 | 167.5 | -5.4 |
| 2.4 மொத்த வருவாய் .. | ரூ. ப. இ. | 885 | 9.5 | 800 | -9.6 |
| 2.5 மொத்தச் செலவு .. | .. | 1,238 | 3.3 | 1,300 | 5.0 |
| 2.6 மிகை/குறை (+/-) .. | .. | -353 | 9.7 | -500 | 41.6 |
| 3. மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகள் | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் .. | ப. இ. | 268.1 | 8.5 | 278.0 | 3.7 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் .. | ,, | 12,840.0 | 12.1 | 13,455.0 | 4.8 |
| 3.3 மொத்த வருவாய் .. | ரூ. ப. இ. | 2,737.0 | -0.9 | 3,023.0 | 10.4 |

* தற்காலிகமானவை

** மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பேருந்துகளையும் உள்ளடக்கும்.

*** இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகளையும் உள்ளடக்கும்

மூலங்கள் : இலங்கை புகைவண்டிப் பகுதி, உந்து ஊர்திகள் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக் குழு.

புகைவண்டிகளை ஏற்பாடுசெய்தமை என்பனவற்றின் மூலம் புகைவண்டிப் பணிகளின் தரமும் கிடைப்பனவும் உயர்வாக இருந்தன. இவ்வபிவிருத்திகள் மூலம் பயணிகள் கிலோமீற்றரளவு நியதிகளில் அளக்கப்பட்ட இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் ஆதரவு மட்டம் 28,100 இலட்சத்துக்கு அதிகரித்து முன்னைய ஆண்டின் 2 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 8 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இதன்விளைவாக, இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் பயணிகள் பணிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் முன்னைய ஆண்டின் 7 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 5 சதவீதத்தால் அதிகரித்தது. ஆயினும் ஆய்வுக்குரிய ஆண்டில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் மொத்த வருவாய், சரக்குப் பணிகளிலும் ஏனைய நடவடிக்கைகளிலுமிருந்து பெற்ற வருவாய்களின் வீழ்ச்சி காரணமாக 10 சதவீதத்தால் வீழ்ச்சிடைந்தது. இவ்வேளையில், நடைமுறைச் செலவு ரூ. 13,000 இலட்சத்திற்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் இவ் வருவாய் மற்றும் செலவுப் பாய்ச்சல்களைப் பிரதிபலிப்பதாய் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு நட்டம் 1992 இன் ரூ. 3,530 இலட்சத்திலிருந்து 1993 இல் ரூ. 5,000 இலட்சத்துக்கு அதிகரித்தது.

1993 நவெம்பரில், இலங்கைப் புகைவண்டி அதிகார சபைச் சட்டமூலம் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கைப் புகைவண்டிப் பகுதியைத் தன்னாட்சியுடைய சபையாக மாற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1993 இல் தனியார் துறையால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் மேலும் விரிவடைந்தன. 1993 இல் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் நீங்கலான மாகாண சபைகளின் தனியார் பேருந்து போக்குவரத்துத் திணைக்களங்கள் தனியார் பேருந்து தொழிற்படுத்துவோருக்கு மொத்தம் 1,811 புதிய பாதை அனுமதிச் சீட்டுக்களை வழங்கின. பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை மேலும் வசதியாக்கும் பொருட்டு 1993 இல் புதிய பேருந்து உடற்கோப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

### வீடமைப்பு

1993 இல் பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வீடமைப்புத்துறை நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைந்தன. 1990 இல் ஆரம்பித்த இந்நிகழ்ச்சித்திட்டம் ஆறாண்டுக் காலத்தை உள்ளடக்கியுள்ளது. இவ்வாண்டுக் காலத்தில் பத்து துணை நிகழ்ச்சித்திட்டங்கள்* புதுவீடு கட்டுதற்கும், வசிக்கும் வீடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், ஏழைகளின் வீட்டு நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் கடன்களையும் கொடைகளையும் வழங்கித் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன.

பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயலாற்றும் பாரிய முகவராக, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கிராமிய மற்றும் நகர்ப்புறத் துறைகளிலுள்ள குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு உதவும் நோக்குடன் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டத்தையும் நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தையும் நேரடியாகவே பொறுப்பேற்றுள்ளது. உதவிபெற்ற குடும்பங்களின் நியதிகளில் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழான நடவடிக்கைகள் 1992 இல் 38,710 ஆக இருந்து 1993 இல் 31,078 இற்கு வீழ்சியடைந்தமையைப் பிரதிபலித்தன. இவ்வீழ்ச்சிக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களும் கட்டுமான வேலையை முடிக்க வேண்டுமென்ற வற்புறுத்தலும் பெருமளவு காரணமாகும். ஆய்வுக்குரிய ஆண்டில், கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தில் ரூ. 2,980 இலட்சம் செலவில், மொத்தம் 31,624 வீட்டு அலகுகள் கட்டிமுடிக்கப்பட்டன. கடன்வசதிகள் கிடைத்தல், கட்டிமுடித்தல் என்பனவற்றின் நியதிகளில் நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது. முன்னைய ஆண்டில் கடன்வசதிபெற்ற 6,170 குடும்பங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் மொத்தமாக 7,164 குடும்பங்கள் கடன்வசதியைப் பெற்றன. 1993 இல் மொத்தம் 5,288 வீட்டு

---

* பத்து துணை நிகழ்ச்சித் திட்டங்களாவன, கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (கி.வீ.து.நி.தி), நகர்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (ந.வீ.து.நி.தி), இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (இ.வீ.து.நி.தி), மாகாணசபைகள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (மா.ச.வீ.து.நி.தி), மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (ம.வீ.து.நி.தி.), பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (பெ.வீ.து.நி.தி), கூட்டுறவு வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (கூ.வீ.து.நி.தி), ஊழியர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (ஊ.வீ.து.நி.தி), தனியாள் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (த.வீ.து.நி.தி), தனியார் அபிவிருத்தியாளர் துணை நிகழ்ச்சித் திட்டம் (த.அ.து.நி.தி) என்பனவாகும்.

அட்டவணை 1.30

## பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம் 1990 – 1993 (அ)

| துணை நிகழ்ச்சித் திட்டம் | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | | | | முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை | | | | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூ. ப. இ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (ஆ) | 1990 | 1991 | 1992 | 1993 (ஆ) |
| கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | 25,496 | 30,429 | 38,710 | 31,078 | 13,655 | 24,071 | 22,846 | 31,624 | 154.6 | 243.4 | 259.5 | 298.1 |
| நகர வீடமைப்பு துணைநிகழ்ச்சித் திட்டம் குறைந்த வருமானக் குடும்பங்கள் | 5,377 | 5,806 | 6,170 | 7,164 | 2,954 | 5,627 | 3,487 | 5,288 | 32.6 | 54.2 | 87.9 | 96.5 |
| நகர (சிறப்பு) நடுத்தர வருமானக் குடும்பங்கள் நிகழ்ச்சித் திட்டம் | - | 16 | 590 | 295 | - | 16 | 590 | 295 | - | 222.7 | 211.9 | 215.5 |
| மாகாணசபை வீடமைப்புத்துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | 1,070 | 1,422 | 2,141 | 1,633 | 128 | 1,160 | 1,006 | 1,265 | 3.9 | 10.0 | 12.9 | 13.4 |
| இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | 15,344 | 14,094 | 13,969 | 8,532 | 3,862 | 6,161 | 9,163 | 7,819 | 99.0 | 142.7 | 169.0 | 257.9 |
| பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (ஈ) | 121 | 313 | 228 | 570 | 121 | 313 | 288 | 570 | - | - | - | 7.0 |
| மகாவலி வீடமைப்புத்துணை நிகழ்ச்சித் திட்டம் | 9,751 | 4,721 | 3,505 | 3,705 | (உ) 4,129 | (உ) 3,714 | (உ) 5,968 | (உ) 3,105 | (ஊ) 31.1 | (ஊ) 15.8 | (ஊ) 25.4 | 14.7 |
| ஊழியர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் (இ) | - | - | 249 | 274 | - | - | - | 146 | - | - | 3.6 | 11.7 |
| மொத்தம் | 57,159 | 56,801 | 65,562 | 53,251 | 24,849 | 41,062 | 43,288 | 50,112 | 321.2 | 688.9 | 770.2 | 914.8 |

(அ) பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் குறிப்பிட்ட சில நிகழ்ச்சித் திட்டங்களை மட்டும் அட்டவணை உள்ளடக்குகின்றது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றம் மட்டும்.

(ஈ) 1990 – 92 காலப்பகுதியில் பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் மதோஅ சபைக்கும் இஅபெகூ இற்கும் கீழ் செயற்பட்டது. 1993 இலிருந்து நிகழ்ச்சித்திட்டம் "பெருந்தோட்ட வீடமைப்பு சமூக நலன்புரி பொறுப்பாண்மைக்கு" மாற்றப்பட்டது.

(உ) மகாவலி பொருளாதார முகவராண்மை தேசிய வீடமைப்பு மேலாண்மைச்சபை மற்றும் துணைக் குடும்பங்களால் பொறுப்பேற்கப்பட்ட சொந்தக் கட்டுமானம் என்பனவற்றின்கீழ் முற்றுப்பெற்ற அலகுகள் 1991 – 1992 இனைப் பொறுத்தமட்டில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் கீழ் முற்றுப்பெற்ற அலகுகளையும் உள்ளடக்கும்.

(ஊ) மகாவலி பொருளாதார முகவராண்மையினாலும் மகாவலி பொருளாதார முகவரினாலும் புதிய குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அலகுகள்.

மூலங்கள் : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
மகாவலி பொருளாதார முகவராண்மை,
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை,
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,
பெருந்தோட்ட வீடமைப்பு சமூக நலன்புரிப் பொறுப்பாண்மை.

அலகுகள் கட்டிமுடிக்கப்பட்டு முன்னைய ஆண்டைவிட 52 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இவ்வேளையில் உயர், நடுத்தர வருமானக் குடும்பங்களுக்காக அமைக்கப்பட்ட சிறப்பு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மொத்தமாக 295 வீட்டு அலகுகள் கட்டிமுடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களினதும் கொடைகளினதும் பெறுமதி ரூ. 2,160 இலட்சமாக இருந்தது. வங்கிகள், மாகாணசபைகள் மற்றும் அரச முகவர்கள் போன்ற ஏனைய முகவர்களின் ஈடுபாட்டுடன் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால், இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் செயலாற்றப்பட்டது. இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட அளவான நிதியே கிடைக்கப் பெற்றமையினால் தேசிய அபிவிருத்தி அதிகாரசபை மட்டும் 1992 இன் 13,969 குடும்பங்களுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 8,532 குடும்பங்களை அடையக்கூடியதாக இருந்தது. இதனால் நன்மையடைந்தோருக்குக் கொடுத்த கடன்களினதும் கொடைகளினதும் பெறுமதி ரூ. 2,580 இலட்சமாக இருந்தவிடத்து இவ்வாண்டிற் கட்டிமுடித்த அலகுகளின் எண்ணிக்கை 7,819 ஆக இருந்தது. இவ்வேளையில் மாகாண சபை வீடமைப்புத் துணை நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சபைகளுக்கும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை உதவியளித்தது. இத்திட்டத்தின்கீழ் தேசிய அபிவிருத்தி அதிகாரசபை ஆய்வுக்குரிய ஆண்டில் 1,633 குடும்பங்களுக்கு 1,265 வீடமைப்பு அலகுகளைக் கட்டிமுடிப்பதற்காகக் கொடைகளையும் கடன்வசதிகளையும் வழங்கியது.

முன்னர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தாலும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையாலும் பொறுப்பேற்கப்பட்டிருந்த பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் இவ்வாண்டில் பெருந்தோட்ட வீடமைப்புச் சமூக நலன்புரி நம்பிக்கைப் பொறுப்புக்கு மாற்றப்பட்டது. தோட்ட முகாமைத்துவத்தை தனியார்மயப்படுத்தியதைத் தொடர்ந்து இந்நம்பிக்கைப் பொறுப்பு நிறுவப்பட்டிருப்பதுடன் இது தோட்டத் தொழிலாளிகளின் வீடமைப்பு அபிவிருத்திக்கும் பொறுப்பாகவுள்ளது. 1993 இல் தொழிலாளர் வீடமைப்பு மீள் கூரையமைத்தல் திட்டத்தின் கீழ் இந்த நம்பிக்கைப்பொறுப்புக்கு 565 அலகுகளைக் கட்டிமுடிக்கத்தக்கதாயிருந்தது. ஆய்வுக்குரிய ஆண்டில், மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், மகாவலி பொருளாதார முகவரகம் பீ. சீ. எச். முறைகளில் 3,105 வீட்டு அலகுகளைக் கட்டிமுடித்தது.

1993 இல், தனியார் துறையின் வீடமைப்பு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக, முக்கிய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்கள் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டின. 1993 இல் வீடமைப்பு நோக்கங்களுக்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகியவை 1992 இன் ரூ. 17,440 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் மொத்தமாக ரூ. 22,040 இலட்சத்தை வழங்கி 26 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. 1993 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கியால் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி 54 சதவீதத்தால் ரூ. 4,660 இலட்சத்துக்குக் கணிசமாக அதிகரித்தது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையேயும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தால் 3,557 இற்கு அதிகரித்தவிடத்து ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி 115 சதவீதத்தால் ரூ. 7,140 இலட்சத்துக்கு அதிகரித்தது. அரச ஈட்டு

முதலீட்டு வங்கி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட கடன் ஒப்புதல்களில் இதுவே மிகவுயர்ந்த பெறுமதியாக இருந்தது. 1993 இல் இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தால் 2,243 இற்கு வீழ்ச்சியுற்றாலும் கடன்களின் பெறுமதி ரூ. 9,550 இலட்சத்துக்கு 34 சதவீதத்தால் அதிகரித்தது. மக்கள் வங்கியும் 10,258 பேர்கள் தொடர்பாக வீடமைப்புத் துறைக்காக ரூ. 4,140 இலட்சத்தை வழங்கியதெனினும், 1992 இல் 12,983 விண்ணப்பதாரர்களுக்கு வழங்கிய ரூ. 5,140 இலட்சமான கடன்களுடன் ஒப்பிடுகையில் இது குறைந்தே காணப்பட்டது. இவ்வேளையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் அளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் பெறுமதியும் கூட கணிசமான முன்னேற்றத்தைக் காட்டின. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 1992 இல் ரூ. 1,000 இலட்சம் பெறுமதியான 1,520 கடன்களை வழங்கியதற்கெதிராக 1993 இல் ரூ. 2,120 இலட்சம் தொகையான 2,050 கடன்களை வழங்கியது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையேயும் தேசிய சேமிப்பு வங்கியால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் எண்ணிக்கை 35 சதவீதத்தால் 985 இற்கு அதிகரித்த வேளையில், கொடுக்கப்பட்ட கடன்களின் பெறுமதியும் 34 சதவீதத்தால் ரூ. 1,560 இலட்சத்துக்கு அதிகரித்தது.

### நகர அபிவிருத்தி

ஆய்வுக்குரிய ஆண்டில், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகள் விரிவடைந்தன. 1993 இல் நகர அபிவிருத்திக்கான மொத்த முதலீடுகள் முன்னைய ஆண்டிற் செலவிடப்பட்டரூ. 3,380 இலட்சத்திலிருந்து ரூ. 7,050 இலட்சத்திற்கு இரு மடங்கிலும் கூடுதலாக அதிகரித்தன. அதிகரித்த முதலீடுகள் பெரும்பாலும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் கீழ் பிரதிபலிக்கப்பட்டன. நகர அபிவிருத்தி மீதான மொத்த செலவில் ரூ. 4,850 இலட்சம் கொண்ட தொகை அல்லது 69 சதவீதம், ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மீதே செலவழிக்கப்பட்டது. இத்தொகையில் பேலியகொடையில் களஞ்சியத் தொகுதி ஒன்றின் கட்டடவாக்கத்துக்குச் செலவழிக்கப்பட்ட ரூ. 4,320 இலட்சமும் அடங்கும். இவ்வேளையில் வாடிக்கையாளர்களின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டங்கள் மீது ரூ. 970 இலட்சம் செலவழிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி வங்கியால் அபிவிருத்தி குறைந்த அல்லது பயன்படுத்தப்படாத காணிக் கொள்வனவுகளில் மேலும் ரூ. 910 இலட்சம் தொகையான செலவேற்பட்டது.

### வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்

ஆய்வுக்குரிய ஆண்டில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் மாகாண சபைகளும் ஏறத்தாழ 23,900 கிலோ மீற்றர்களைக் கொண்ட வீதிவலையமைப்பொன்றைப் பேணின. மொத்த வீதி வலையமைப்பின் 46 சதவீதம் அல்லது 10,960 கிலோமீற்றர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்பட்டன. 1993 இல் வீதிகளை அமைத்தல், திருத்துதல், புனரமைத்தல் ஆகியவற்றின் மீது ரூ. 25,560 இலட்சமான தொகையையும், அவற்றைப் பேணுவதற்காக ரூ. 1,810 இலட்சமான தொகையையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செலவிட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகள் முக்கியமாக தற்போதுள்ள வீதி வலையமைப்பின் புனரமைப்பையும் திருத்தத்தையும் மையமாகக் கொண்டிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட வீதித் திருத்த செயற்றிட்டத்தின் கீழ், அவிசாவளையிலிருந்து அட்டனுக்கும் ஹோமகமவிலிருந்து இரத்தினபுரிக்குமான 145 கிலோமீற்றர்களைக் கொண்ட புனரமைப்பு வேலை தொடர்ந்திருந்தது. இத்துடன் இவ்வாண்டிலே பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட மூன்றாவது வீதிச் செயற்றிட்டத்தின்கீழ் 175 கிலோமீற்றர்களைக் கொண்ட புனரமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளும் தொடர்ந்திருந்தன. தற்போதுள்ள, களுத்துறையிலிருந்து கொழும்பு வரையான காலி வீதிக்கும் சிறி ஜயவர்த்தனபுர வீதிக்கும் மாற்று வழியை வழங்குவதற்காக வஸ்கடுவ பண்டாரகம – கெஸ்பாவ வீதியைத் திருத்துவதற்கான நிருமாண வேலை 1993 இலும் தொடர்ந்திருந்தது. பேலியகொடை – புத்தளம் வீதியில், பேலியகொடை – கட்டுநாயக்கப் பகுதியின் புனரமைப்பு வேலை ரூ. 3,300 இலட்சம் மதிப்பிடப்பட்ட செலவில் 1993 இல் ஆரம்பிக்கப்பட்டது. புதிய களனிப் பாலத்தினைப் பழுதுபார்க்கும் வேலை ரூ. 1,700 இலட்சம் மதிப்பிடப்பட்ட செலவில் 1993 இல் தொடரப்பட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில், அநுராதபுரத்திலிருந்து மிகிந்தலைக்குப் புதிய கிளைப்பாதை தொடங்கப்பட்ட காரணத்தால், புகைவண்டிப் பாதையின் கிலோமீற்றர் அளவு 9 கிலோமீற்றர்களால் 1,953 கிலோமீற்றர்களுக்கு அதிகரித்தது. நுகேகொடையிலிருந்து ஹோமகம வரையுமான களனிப் பள்ளத்தாக்குப் புகைவண்டிப் பாதையை அகலமாக்கும் வேலை இவ்வாண்டில் நிறைவேறியது.

## தொடர்பூட்டல் பணிகள்

1993 இல் நாட்டுக்கு வழங்கப்பட்ட இயலளவு மற்றும் பணிகள் நியதிகளில், அஞ்சல் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் சிறிதளவு முன்னேற்றம் இருந்தவிடத்து தொலைத் தொடர்புத்துறையில் மிதமான முன்னேற்றம் காணப்பட்டது.

அஞ்சல் திணைக்களத்தால் கையாளப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1992 இல் 4,690 இலட்சத்திலிருந்து 1993 இல் 4,860 இலட்சத்திற்கு 4 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அஞ்சல் கையாளல் முறை 4 சதவீதத்தாலும், 3 சதவீதத்தாலும் அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும். உள்நாட்டுப் பொதி கையாளல் 581,000 இற்குச் சிறிதளவு அதிகரித்தவிடத்து, வெளிநாட்டுப் பொதிகளின் கையாளல் 69,000 ஆக முன்னைய ஆண்டு மட்டத்திலே மாற்றமின்றி இருந்தது. இயலளவு நியதிகளில் அஞ்சல் அலுவலக வலையமைப்பு 1992 இல் 4,018 ஆக இருந்து 1993 இல் 4,042 இற்கு விரிவடைந்தது. இதற்கேற்ப அஞ்சல் அலுவலகம் ஒன்று செயலாற்றிய பரப்பளவு 1993 இல் 16.2 சதுர கிலோமீற்றர்களுக்கு சிறிதளவு குறைந்து, பொதுமக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த அஞ்சற் பணிகள் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. எனினும் இவ்விரு ஆண்டுகளுக்கிடையே, வதிபவர் ஒருவருக்கான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை 27 இலிருந்து 28 இற்குச் சிறிதளவால் மட்டுமே அதிகரித்து நாட்டில் விரைவான தொடர்பூட்டல் முறைகள் அதிகளவில் கிடைக்கத்தக்கதாக இருந்ததை ஓரளவு பிரதிபலித்தது.

ஏற்கெனவேயுள்ள தொலைத்தொடர்பு வலையமைப்பை விரிவுபடுத்தி தரமுயர்த்தும் நோக்கங்களுடன் 1993 இல் சிறீ லங்கா ரெலிகொம் பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொண்டது. இவ்வாண்டில் தொடரப்பட்ட முக்கியஅபிவிருத்திச் செயற்றிட்டங்களாவன, உலகளாவிய வர்த்தகத் தொலைத் தொடர்பு துணைக்கோள் முறைக்கான மூலதனத்தை வழங்குதல், கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தின் தொலைத் தொடர்பு வலையமைப்பின் (கட்டம் II) முன்னேற்றம், கம்பகா, கட்டுநாயக்க பரிவர்த்தனைப் பிரதேசத்தின் வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், பன்னாட்டு ஆழி நிலையக் கூறுடனான இரண்டாவது தொலைத்தொடர்புச் செயற்றிட்டம், தரை நிலைய தூர இடங்களுக்கான தொலைக்கடத்தி வலையமைப்பு, முகாமைத்துவ தகவல்முறை மற்றும் தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டம், தென்கிழக்காசிய, மத்தியகிழக்கு, மேற்கு ஐரோப்பிய, கடற்கீழ் கம்பி செயற்றிட்டம் (தெ. கி. ஆ. - ம. கி - மே. ஐ. 2) மாத்தறை மாவட்டத்தில் தொலைத் தொடர்பு வலையமைப்பின் அபிவிருத்தி என்பனவாம்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன், தொலைத்தொடர்பு வசதிகளுக்கான உடனடிக் கேள்வியைச் சமாளிக்கும் பொருட்டு, சிறி லங்கா ரெலிகொம் விரைவுபடுத்தப்பட்ட அடிப்படையில் பல இடைக்காலச் செயற்றிட்டங்களையும் நிறைவேற்றியது. இதற்கேற்ப ஆய்வுக்குரிய ஆண்டில் நுகேகொடையில் தலைமைப் பரிவர்த்தனை நிலையம் (8,000 இணைப்புக்கள்), பாணந்துறைக்கான (நெடுந்தூர மின் ஆழி அலகு) சீ. எஸ். ஈ. டி. (2,000 இணைப்புக்கள்), மாறவிலவிற்கான (நெடுந்தூர மின் ஆழி அலகு) சி. எஸ். ஈ. டி. (1,000 இணைப்புக்கள்) ஆகிய திட்டங்கள் முற்றுப்பெற்றுவிட்டன. மேலும், துரித கொழும்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்லொக் நகரம், கோட்டே, இரத்மலானை, மொறட்டுவை ஆகியவற்றில் ஆழியை ஏற்படுத்தும் இயலளவை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் 1993 இன் இறுதியில் முற்றுப்படுத்தப்பட்டன. இவற்றுடன் இவ்வாண்டிலே "கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய்" என்ற அடிப்படையில் நிறுவப்பட்டு தொழிற்படுத்தப்பட்ட "மொபிரெல்" எனப்படும் செலூலர் நடமாடும் தொலைபேசி முறை ஏறத்தாழ 4,000 தொலைபேசிகளை வழங்க முடிந்தது. இப்புதிய அமைப்பில் உள்ளடங்கும் பகுதிகளாக கொழும்பு, மாறவில தொடக்கம் அளுத்கமவரை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, குருணாகல், குளியாப்பிட்டி ஆகிய பிரதேசங்கள் அமைந்தன. மேலும், பன்னாட்டு தொடர்பூட்டல் வசதிகளை முன்னேற்றும் நோக்கத்துடன், இலங்கையில் பொதுமக்கள் ஆழித் தொகுதித் தரவு வலையமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவிடத்து, நெரிசல்களை தளர்த்தும் பொருட்டு பன்னாட்டுத் தொடர்பூட்டல் நெறிகளை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள கொண்டு செல்லத்தக்க தரை நிலைய செயற்றிட்டத்தின் வேலை 1993 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது.

இவ்வுட்கட்டமைப்பு அபிவிருத்திகளைத் தொடர்ந்து, 1993 இல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 22,270 ஆல் 157,774 இற்கு கணிசமாக அதிகரித்தன. முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட புது இணைப்புக்களின் எண்ணிக்கை 10,607 ஆக இருந்தது. இதன் விளைவாக இவ்விரு ஆண்டுகளுக்கிடையே தொலைபேசிச் செறிவு (ஒவ்வொரு 100 பேருக்குமான தொலைபேசிகள்) 0.78 இலிருந்து 0.93 இற்கு அதிகரித்தது. எனினும் தொலைபேசி வசதிகளுக்கான கேள்வியின் துரித வேகத்துக்கேற்ப நடைமுறையிலிருந்த தொலைத்

*அட்டவணை 1.31*

## அஞ்சல் தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி 1989 - 1993

| விடயம் | | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 * |
|---|---|---|---|---|---|---|
| 1. அஞ்சல் பணிகள் | | | | | | |
| 1.1 அஞ்சல் வழங்கும் பரப்புக்களின் எண்ணிக்கை | ... | 6,630 | 6,636 | 6,729 | 6,729 | 6,729 |
| 1.2 அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.) | ... | 16.8 | 16.6 | 16.5 | 16.3 | 16.2 |
| 1.3 அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 3,908 | 3,945 | 3,982 | 4,018 | 4,042 |
| 1.3.1அரசு | ... | 3,844 | 3,864 | 3,884 | 3,891 | 3,895 |
| 1.3.2தனியார் | ... | 67 | 81 | 98 | 127 | 147 |
| 1.4 ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | ... | 4,300 | 4,307 | 4,331 | 4,331 | 4,336 |
| 1.5 குடியிருப்பாளரொருவருக்கு கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை | .... | 26 | 30 | 29 | 27 | 28 |
| 2. தொலைத் தொடர்பூட்டல் பணி | | | | | | |
| 2.1 உள்நாட்டு தொலைபேசிப் பணி | ... | | | | | |
| 2.1.1தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை | ... | 105,007 | 121,388 | 125,834 | 135,504 | 157,774 |
| 2.1.2வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் | ... | 6,087 | 10,241 | 6,579 | 10,607 | 22,270 |
| 2.1.3இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | .... | 48,400 | 47,945 | 61,313 | 96,207 | 124,066 |
| 2.1.4தொலைபேசிக்கான கேள்வி (எண்ணிக்கை) | ... | 153,407 | 169,333 | 187,147 | 231,711 | 281,840 |
| 2.1.5தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | ... | 0.62 | 0.71 | 0.73 | 0.78 | 0.93 |
| 2.2 கடல் கடந்த தொலைத் தொடர்பூட்டல் பணி | ... | | | | | |
| 2.2.1ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை | ... | 1,591 | 1,666 | 1,740 | 1,583 | 1,626 |
| 2.2.2எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | ... | 59 | 89 | 84 | 103 | 59 |
| 2.2.3வெளிச் செல்லும் பணிகள் (எண்ணிக்கை) | ... | | | | | |
| 2.2.3.1வெளிநாட்டு தொலைபேசி போக்குவரத்து (அ) | ... | 8,038,000 | 9,006,000 | 15,599,912 | 17,775,066 | 18,281,980 |
| 2.2.3.2வெளிநாட்டுத் தந்திகள் (ஆ) | ... | 3,023,000 | 2,720,000 | 2,465,682 | 2,483,002 | 2,203,370 |
| 2.2.3.3வெளிநாட்டு ரெலக்ஸ் போக்குவரத்து (அ) | ... | 4,777,000 | 4,472,122 | 4,346,467 | 4,230,994 | 3,375,600 |

(அ) எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.

(ஆ) எண் தொகைகள் சொற்களில் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.

* தற்காலிகமானவை.

*மூலங்கள் : அஞ்சல் திணைக்களம், சிறிலங்கா ரெலிகொம்.*

தொடர்பு வலையமைப்பின் பற்றாக்குறையைப் பிரதிபலிக்கும் வகையில் 1993 இன் இறுதியில் காத்திருந்தோர் பட்டியலிலிருந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 27,859 ஆல் .124,066 இற்கு அதிகரித்தது.

1993 இல் ரெலெக்ஸ் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 3 சத வீதத்தால் 1,626 இற்கு அதிகரித்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் மொத்தக் கடல் கடந்த தொலைபேசிப் போக்குவரத்து தொடர்ந்தும் 3 சதவீதத்தால் அதிகரித்தவிடத்து, முன்னைய ஆண்டினைப்போன்றே கடல்கடந்த தந்திப் போக்குவரத்தும், கடல்கடந்த ரெலெக்ஸ் போக்குவரத்தும் முறையே 11 சதவீதத்தாலும் 20 சதவீதத்தாலும் மேலும் வீழ்ச்சியுற்றன.

## சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்

1993 இல் சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் அதன் மூன்றாம் நான்காம் சுற்று நடவடிக்கைகளை நடாத்தியது. 1992 பெப்புருவரியில் தொடங்கி, 1994 சனவரியில் முற்றுப்பெறுமென எதிர்பார்க்கப்பட்ட சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாவது சுற்று 101,000 குடும்பங்களை உள்ளடக்கிய 22 பிரிவுச் செயலாளர்கள் பிரிவில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சனசக்தியின் நான்காவது சுற்று நடவடிக்கைகள் 1993 மாச்சில் 25 பிரிவுச் செயலாளர்கள் பிரிவுகளில் ஆரம்பித்தமையுடன் மேலும் 96,000 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலிரு சுற்று நடவடிக்கைகளும் 1991 இலும் 1992 இலும் நிறைவேறி 223,460 குடும்பங்களை அடைந்தன. இதன்படி, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து இன்றுவரையும் 420,460 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன. 1993 நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாம் நான்காம் சுற்றுக்களின் கீழ் சனசக்தி மூலம் நன்மையடைந்தோருக்கு வழங்கிய நுகர்வுப்பொருள் ஆதாரத்திற்கான மொத்தச் செலவு ரூ. 34,510 இலட்சமாக இருந்தது. சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 1993 திசெம்பர் முடியும்வரை அது ஏழைகளின் நுகர்வுப் பொருள் ஆதாரத்துக்காக ரூ. 13.6 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையைச் செலவிட்டுள்ளது. ஆய்வுக்குரிய ஆண்டில் இரண்டாவது சுற்றினால் 92,888 நன்மைபெறுநர்கள் மூலதன உரித்துடைய சான்றிதழ்களைப் பெற்றனர்.

ஆய்வுக்குரிய ஆண்டில் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் நன்மையடைந்தோர் வருமானத்தையுருவாக்கும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தொடர்ந்தும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். மூன்றாவது சுற்றின்கீழ் 50,982 குடும்பங்களுக்கு ரூ. 2,430 இலட்சம் கொண்ட கடன் வசதிகள் வழங்கப்பட்டன. கடன் வழங்குவதில் ஈடுபட்டிருந்த நிதி நிறுவனங்களாவன, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பனவாம்.

இவ்வேளையில் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சனசக்தி நிகழ்ச்சித்திட்ட முயற்சிகள் உதவியுள்ளன. சனசக்தியின் முதலிரு சுற்றுக்களும் 159,224 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியவிடத்து மூன்றாவது சுற்று 38,235 குடும்பங்களுக்கு இத்தகைய வாய்ப்புக்களை வழங்கியது. இவ்வேலைவாய்ப்புக்கள் வேளாண்மை,

கடற்றொழில், தயாரிப்புக் கைத்தொழில்கள், வியாபாரம், வர்த்தகம் ஆகிய துறைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

1993 இல் சனசக்தி நம்பிக்கை நிதியம், இலக்கிடப்பட்ட சமூகங்களின் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் சமூகச் செயற்றிட்டங்கள், கடன் செயற்றிட்டங்கள், மனிதவள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், ஊட்டச்சத்துச் செயற்றிட்டங்கள் ஆகிய நான்கு முக்கிய செயற்றிட்டங்களின் கீழ் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. சமூகச் செயற்றிட்டங்களின் கீழ், 789 கிராமிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் தொடக்கப்பட்டு, அவற்றை உருவாக்குவதற்கும், தரமுயர்த்துவதற்கும் புனரமைப்பதற்கும் ரூ. 1,210 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது. இவற்றுடன் பங்காளர் அமைப்புகள் மூலம் வேளாண்மை, சிறு கைத்தொழில்கள், கால்நடை ஆகிய முயற்சிகளிலுள்ள துறைகளில் 14,878 நுண் செயற்றிட்டங்களுக்கு ரூ. 880 இலட்சம் பெறுமதியான கடன் வசதிகளைச் சனசக்தி நம்பிக்கை நிதியம் வழங்கியது. விழிப்புணர்வை வளர்த்தல், தேசிய அபிவிருத்தி, சமூகத்தவரை ஒன்றுதிரட்டல் ஆகியவற்றின் மூலம் மக்களை வறுமைப்பிடியிலிருந்து படிப்படியாக விடுவிப்பதற்கு எதிர்பார்த்த மனிதவள அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் ரூ. 700 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது. 1993 இல் கர்ப்பிணித் தாய்மார், பிள்ளைகள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஊட்டச்சத்துச்செயற்றிட்டங்களின் மீது ஏற்பட்ட செலவு ரூ. 180 இலட்சமாக இருந்தது.

## நலத்துறை

நலப் பணிகள் மீதான மொத்தச் செலவு 1992 இல் ரூ. 65,410 இலட்சமாக இருந்து 1993 இல் ரூ. 70,640 இலட்சத்துக்கு 8 சதவீதத்தால் அதிகரித்தது. சார்பு நியதிகளில் மொ. உ. உ. இல் அதன் பங்கும் 1992 இன் 1.5 சதவீதத்திலிருந்து 1993 இல் 1.4 சதவீதத்துக்கு சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே நலத்துறை மீதான நடைமுறைச் செலவு 26 சதவீதத்தால் ரூ. 57,110 இலட்சத்துக்கு அதிகரித்தவிடத்து இத்துறையின் மூலதனச் செலவு 33 சதவீதத்தால் ரூ. 13,530 இலட்சத்துக்கு வீழ்ச்சியுற்றது.

1993 இல் தேசிய நலத்துறைக் கொள்கையின் முக்கிய திணிப்பானது நலத்துறை மேம்பாடு, நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும், ஏற்கெனவே உள்ள பணிகளின் தரத்தினையும் அளவினையும் வலுப்படுத்தல், நலத்துறை நிருவாகத்தை பன்முகப்படுத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது. தேசிய நலத்துறைக் கொள்கையில் இனங்காணப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், தேசிய வழிப்படுத்துங்குழு ஒன்று 1993 சனவரியில் அமைக்கப்பட்டது. இக்குழுவும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இனங்காணப்பட்டு முன்னுரிமையளிக்கப்பட்ட குறுங்காலக் கொள்கை வழிமுறையினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு பல துணைக் குழுக்களை நியமித்தது. இவற்றுடன், 2,000 ஆண்டு வரையும் நலத்துறை அபிவிருத்திக்காகத் தலையாய திட்டம் ஒன்றை அமைத்தற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வேளையில் நலத்துறைக்குத் தேவையான நிதியியல் மூலவளங்களைத் திரட்டும் பணிப்படையினர், அரச மருத்துவமனைகளில் பணம் செலுத்தும் படுக்கைகளையும்

அட்டவணை 1.32

## நலத்துறைப் பணிகள் 1989 - 1993

| விடயம் | | 1989 | 1990 | 1991 | 1992 | 1993* |
|---|---|---|---|---|---|---|
| 1. மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருந்து கையாள்பவை) | ... | 502 | 502 | 504 | 506 | வி.கி. |
| 2, படுக்கைகள் | ... | 46,620 | 42,079 (ஆ) | 42,437 (ஆ) | 48,061 | வி.கி. |
| 3. மத்திய மருந்தகங்கள் | ... | 361 | 278 (ஆ) | 275 (ஆ) | 350 | வி.கி. |
| 4. மருந்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 2,456 | 2,440 (அ) | 2,934 | 3,345 | வி.கி. |
| 5. துணை மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 1,193 | 1,074 (அ) | 1,201 | 1,253 | வி.கி. |
| 6. ஆயுர்வேத மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 13,076 | 13,284 | 12,852 | 13,131 | 13,454 |
| 7. மருத்துவத் தாதிமாரின் மொத்த எண்ணிக்கை | ... | 9,486 | 8,957 (அ) | 9,934 | 11,214 | வி.கி. |
| 8. உடன் கவனிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 6,030 | 5,707 | 5,697 | 5,710 | வி.கி. |
| 9. உள்நோயாளர்களின் எண்ணிக்கை ('000) | ... | 2,525 | 2,533 (ஆ) | 2,629 (ஆ) | 3,023 | வி.கி. |
| 10. வெளி நோயாளர்களின் எண்ணிக்கை ('000) | ... | 31,781 | 28,401 (ஆ) | 28,575 (ஆ) | 36,827 | வி.கி. |
| 11. மொத்த நலத்துறைச் செலவு (ரூ. ப. இ.) | ... | 4,639 | 4,964 | 5,229 | 6,541 | 7,064 |
| (அ) நடைமுறைச் செலவு (ரூ. ப. இ.) | ... | 3,381 | 3,685 | 4,110 | 4,518 | 5,711 |
| (ஆ) மூலதனச் செலவு (ரூ. ப. இ.) | ... | 1,258 | 1,279 | 1,119 | 2,023 | 1,353 |

(அ) வடமாகாணம் நீக்கலாக
(ஆ) வடக்குக்கிழக்கு மாகாணங்கள் நீக்கலாக.
* தற்காலிகமானவை

மூலங்கள் : நலத்துறை மகளிர் அலுவல்கள் அமைச்சு,
சுதேச மருத்துவ அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

பணம்செலுத்தும் வெளிநோயாளர் பிரிவுகளையும் அறிமுகப்படுத்தல் மற்றும் நலத்துறைக் காப்புறுதித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தனர்.

1993 இல் நலத்துறை உட்கட்டமைப்பு மீதான முதலீடுகள் மேலும் அதிகரித்தன. உலக வங்கி/பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றால் உதவியளிக்கப்பட்ட நலத்துறை மற்றும் குடும்பத்திட்ட செயற்றிட்டத்தின் கீழ் பிரதேசரீதியான மருந்துச்சாலைகள், கிராமோதய நலத்துறை நிலையங்கள், தொழிற்கூடங்கள் ஆகிய கட்டடவாக்க நடவடிக்கைகள் தொடர்பானநடவடிக்கைகள் தொடர்ந்தன. ஆய்வுக்குரிய ஆண்டில் மாளிகாவத்தையிலிருந்து கொழும்பு பொது மருத்துவமனைக்கு நேராக நீர்வழங்கும் குழாய்களை அமைத்தல், இம்மருத்துவமனையைச் சுற்றிவர நீர்வழங்கும் குழாய்களை அமைத்தல், ஆறு மாடி நோயாளர் படுக்கைத் தொகுதியைக் கட்டுதல், இம்மருத்துவமனையின் கழிவகற்றும் அமைப்பைப் புனரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பினிடாவினால் (கூறு II) நிதியிடப்பட்ட கொழும்பு பொது மருத்துவமனை அபிவிருத்தி மீதான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. யப்பானிய அரசின் உதவியுடன் கட்டப்பட்ட உயிரியல் வைத்திய பொறியியற் பணிகள் பிரிவின் புதிய தொழிற்கூடமும் களஞ்சியச்சாலையும் 1993 யூனில் திறக்கப்பட்டன. இவ்வேளையில் சீன அரசின் உதவியோடு, லேடி றிட்ச்வே மருத்துவமனையில் பத்து மாடிக் கட்டடத் தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கு ஆரம்பத்திட்டங்களைத் தயாரிப்பதற்காகத் தொடக்கக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நோயாளர் பராமரிப்பு மற்றும் ஆரம்ப நலத்துறைப் பராமரிப்பு ஆகிய பணிகளுக்கு உதவும் நோக்குடன் ஆய்வுக்குரிய ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில் 3,213 நலத்துறை ஆட்கள் சேர்க்கப்பட்டனர். இத்தொகையில் 531 உள்ளக மருத்துவ அலுவலர்களும், 534 உள்ளகப் பின் மருத்துவ அலுவலர்களும், 802 தாதிமார்களும், 553 பொதுநல மருத்துவச்சிகளும், 572 உடன் கவனிப்பாளர்களும், 221 ஏனைய வேலையாளர்களும் உள்ளடங்கினர். ஆயினும் நாட்டிற்குத் திருப்திகரமான நோயாளர் பராமரிப்புப் பணியை வழங்குவதில் மருத்துவ நிபுணர்களின் கடும் பற்றாக்குறை தொடர்ந்தும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியது.

1993 இல், தொற்றுநோய்களின் கட்டுப்பாடு, சுகாதாரச் சீராக்கம், கொள்ளை நோய்க்காப்பு, குடும்ப நலத்துறை மேம்பாடு முதலிய சமூக நலத்துறைப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்தன. 1992 இற்கும் 1993 இற்கும் இடையே யப்பானிய மூளைவீக்க நோய், டிங்கு குருதிப்போக்குக் காய்ச்சல் மற்றும் பால்கட்டுதல் மூலம் தடுக்கப்படக்கூடிய நோய்களான தொண்டை அழற்சி நோய், ஏற்புவலி, சின்னமுத்து ஆகியவற்றின் நிகழ்வுகளில் வீழ்ச்சியிருந்தது. 1993 இன் நடுப்பகுதி தொடக்கம் புதிய உலகளாவிய மலேரியாக் கட்டுப்பாட்டுத் திறனைக் கையாளுவதன் மூலம் மலேரியாக் கட்டுப்பாட்டு இயக்கம் தொடர்பான நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. ஆயினும், மலேரியாவின் மொத்த நிகழ்வில் மிகக்குறைந்த வீழ்ச்சியே ஏற்பட்டதுடன், குருணாகல், அநுராதபுரம், மொனராகலை, புத்தளம், மாத்தளை ஆகியவற்றில் பெருமளவு நிகழ்வு இருந்தது. தாமாகப் பெற்ற நோய் எதிர்ப்பு குறைபாட்டு நோய்க்குறிக்கு (எயிட்ஸ்) எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சுற்றுப்புறத்தில் பன்முகப்படுத்துதல் மூலம் அவை செறிவாக்கப்பட்டுள்ளன.

**கல்வி**

1993 இல் அரசு ரூ. 14 மில்லியனை அல்லது அதன் மொத்தச் செலவில் 10 சதவீதத்தைக் கல்விமீது செலவிட்டது. இது முன்னைய ஆண்டிற் செலவிடப்பட்ட தொகையைவிட 12 சதவீத அதிகரிப்பாகும். ஆயினும் மொ. உ. உ. இல் கல்வி சார்ந்த செலவினம் 1992 இல் 2.9 சதவீதமாக இருந்து 1993 இல் 2.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் பெரும்பாலும் பள்ளிக்கூட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீதான அதிகரித்த செலவினம் காரணமாக கல்விமீதான மூலதனச் செலவு ரூ. 28,450 இலட்சமாயிருந்து 42 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தது. 1993 இல் கல்வி மீதான நடைமுறைச் செலவும் 6 சதவீதத்தால் ரூ. 112,110 இலட்சத்துக்கு அதிகரித்தது. இது மதிய உணவு, பள்ளிக்கூடப் பாடநூல்கள், பள்ளிக்கூடப் பருவகால பயணச்சீட்டுக்கள், இலவசமான பள்ளிக்கூடச் சீருடைகள் என்பனவற்றை வழங்குவதற்காகச் செலவிடப்பட்ட ரூ. 24,530 இலட்சத்தை உள்ளடக்கியிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களினால் 10,706 பள்ளிக்கூடங்களிற் பயின்ற மொத்தம் 43 இலட்சம் பிள்ளைகள் நன்மையடைந்திருந்தனர்.

1993 இல் பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை 1992 இன் 10,588 இலிருந்து 10,706 இற்கு அதிகரித்தது. பள்ளிக்கூடங்களிலிருந்த மாணவர் தொகையும் 1992 இன் 4,286,275 ஆக இருந்து 1993 இல் 4,302,778 இற்கு அதிகரித்தது. ஒரு பள்ளிக்கூடத்துக்கான மாணவர்களின் எண்ணிக்கை 1992 இல் 405 ஆக இருந்து 1993 இல் 402 இற்கு வீழ்ச்சியடைந்தது. ஆய்வுக்குரிய ஆண்டின் முதல் 9 மாதங்களிலும் கல்விப்பணிக்கு 9,405 ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டதன் மூலம் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 194,039 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக மாணவர் - ஆசிரியர் விகிதம் 1992 இல் 24 ஆக இருந்து 1993 இல் 22 இற்கு மேலும் சீரடைந்தது.

கிராமப் பகுதிகளிற் சமமான கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் கல்விசார்ந்த உட்கட்டமைப்பை விரிவாக்கவும், தரமுயர்த்தவும் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி தேசிய பள்ளிக்கூட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் சகல வசதிகளுடனான ஒரு பள்ளிக்கூடத்தையாகிலும் நிறுவுவதை அரசு குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இச் செயற்றிட்டத்தின்கீழ் தேசிய பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1992 இல் 39 ஆக இருந்து 1993 இல் 90 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 153 பள்ளிக்கூடங்கள் தேசிய பள்ளிக்கூட மட்டத்துக்கு முன்னேற்றுதற்காக இனங்காணப்பட்டுள்ளன. ஆய்வுக்குரிய ஆண்டில் கிராமப்பகுதிகளில் கல்விசார் உட்கட்டமைப்புக்களை விருத்திசெய்தல்பற்றி மேலும் வலியுறுத்தப்பட்டதுடன் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம், பொதுக்கல்விச் செயற்றிட்டம், ஆரம்பப் பள்ளிக்கூட அபிவிருத்திச் செயற்றிட்டம், பெருந்தோட்டப் பள்ளிக்கூடக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம், சேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்புச் செயற்றிட்டம் ஆகிய வெளிநாட்டு நிதியிடப்பட்ட பல செயற்றிட்டங்கள் இணைந்து செயலாற்றின.

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில், ஈராண்டுகளாகப் பல்கலைக்கழகங்கள் மூடியிருந்தமை காரணமாகத் தாமதிக்கப்பட்டிருந்த 1991 / 92 கல்வியாண்டு, 1993 ஆம் ஆண்டில் தொடங்கியது. ஆய்வுக்குரிய ஆண்டில் 8,900

அட்டவணை 1.33

## பொதுக்கல்வி 1989 - 1993

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993* |
|---|---|---|---|---|---|
| 1. பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை ... | 10,296 | 10,382 | 10,520 | 10,588 | 10,706 |
| 1.1 அரச பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை ... | 9,805 | 9,864 | 9,998 | 10,042 | 10,160 |
| 1.2 ஏனைய பள்ளிக் கூடங்கள் ... | 491 | 518 | 522 | 546 | 546 |
| 2. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை ... | 4,179,520 | 4,232,356 | 4,258,697 | 4,286,275 | 4,302,778 |
| 2.1 அரச பள்ளிக் கூடங்கள் ... | 4,057,815 | 4,111,272 | 4,135,114 | 4,156,254 | 4,174,881 |
| 2.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் ... | 121,705 | 121,084 | 123,583 | 130,021 | 127,897 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் ... | 396,748 | 387,314 | 388,315 | 359,003 | 354,742 |
| 4. ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை ... | 153,243 | 184,822 | 177,231 | 182,756 | 194,039 |
| 4.1 அரச ஆசிரியர்கள் ... | 146,997 | 178,333 | 170,735 | 175,813 | 186,973 |
| 4.2 ஏனையோர் ... | 6,246 | 6,489 | 6,496 | 6,943 | 7,066 |
| 5. மாணவர் / ஆசிரியர் விகிதம் ... | 27.27 | 22.89 | 24.2 | 23.6 | 22.3 |
| 6. கல்வி மீதான மொத்தச் செலவினம் (ரூ. ப. கி) (அ) ... | 8,141 | 9,571 | 9,129 | 12,541 | 14,056 |
| 6.1 நடைமுறை ... | 6,612 | 8,529 | 7,951 | 10,533 | 11,211 |
| 6.2 மூலதன ... | 1,529 | 1,042 | 1,178 | 2,008 | 2,845 |

மூலங்கள் : கல்வி உயர்கல்வி அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை
(அ) உயர்கல்வி மீதான அரசின் செலவையும் உள்ளடக்குகின்றது.

மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தவிடத்து, மொத்தமாக 6,056 மாணவர்கள் பட்டம் பெற்றனர். கலை, வர்த்தகம், முகாமைத்துவக் கல்வி ஆகிய பீடங்களுக்குச் சேர்க்கப்பட்ட புதிய மாணவர்கள் தொகை 4,222 ஆக இருந்தவிடத்து, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவப் பீடங்களுக்காகச் சேர்க்கப்பட்ட மாணவர் தொகை 3,745 ஆக இருந்தது. 1993 இன் இறுதியில் ஒன்பது முக்கிய பல்கலைக்கழகங்களிலும் 30,846 மாணவர்கள் இருந்தனர். ஆயினும் 9 பல்கலைக்கழகங்களினதும் கல்விப் பணியாளர்களின் மொத்தத் தொகை 1992 இல் 2,040 ஆக இருந்து 1993 இல் 2,090 இற்குச் சிறிதளவே அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1993 இல் மாணவர் ஆசிரியர் விகிதம் 15 இற்குச் சிறிதளவு முன்னேறியது. 1992 இல் திறந்த பல்கலைக்கழகத்திற்கு மொத்தமாக 8,625 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டதன் மூலம் 1993 இன் இறுதியில் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்த மொத்த மாணவர் தொகையை 17,396 இற்கு அதிகரிக்கச் செய்தது. திறந்த பல்கலைக்கழகத்தின் மொத்தப் பணியாளர் தொகை 1992 இல் 338 ஆக இருந்து 1993 இல் 355 இற்கு அதிகரித்தது.

## மகாவலி நிகழ்ச்சித் திட்டம்*

1993 இல் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 26,420 இலட்சமாக அல்லது இவ்வாண்டிற்கான திட்டமிடப்பட்ட ஒதுக்கில் 95 சதவீதமாக இருந்தது. மொத்தச் செலவில் 48 சதவீதம் அல்லது ரூ. 12,660 இலட்சம் முறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதாவது முறை "பீ" (ரூ. 5,450 இலட்சம்), முறை "சி" (ரூ. 5,700 இலட்சம்), முறை "எச்" (ரூ. 70 இலட்சம்) மற்றும் முறை "எல்" (ரூ. 1,440 இலட்சம்) என்பனவற்றில் செலவிடப்பட்டது. 1993 இல் முறை "ஜீ" முறை "பீ" யுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

மகாவலி செயற்றிட்டத்தின் கீழ்வரும் ஐந்து நீர் மின்வலுப் பொறிகளினாலும் உருவாக்கப்பட்ட மொத்த வலு 1993 இல் 1,905 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு 22 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு நீரேந்து பரப்புக்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளே காரணமாகும். அதேவேளை, முன்னைய ஆண்டினைப் போன்றே 1993 இலும் போவத்தன்னை வலுப்பொறி எவ்வித வலுவையும் உருவாக்கவில்லை. 1993 இல் கொத்மலை தவிர்ந்த அனைத்து மின்வலுப் பொறிகளும் திருந்திய செயலாற்றத்தைக் காட்டின. முன்னைய ஆண்டில் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இரந்தெனிகலவில் உருவாக்கப்பட்டவலு 1993 இல் 361 கிகாவாட் மணித்தியாலத்திற்கு உயர்வடைந்து 87 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இரத்தம்பே, விக்டோரியா, உக்குவல என்பனவற்றில் உருவாக்கப்பட்ட வலுவும் முறையே 188 கிகாவாட் மணித்தியாலத்திற்கும் 731 கிகாவாட் மணித்தியாலத்திற்கும், 178 கிகாவாட் மணித்தியாலத்திற்கும் 49 சதவீதத்தாலும், 24 சதவீதத்தினாலும், 3 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. மாறாக, முன்னைய ஆண்டில் 38 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த கொத்மலையின் வலு உருவாக்கம் 1993 இல் 448 கிகாவாட் மணித்தியாலத்திற்கு 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேசிய வலு வழங்கலில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் வலுப்பொறிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த மின்வலு முன்னைய ஆண்டின் 44 சதவீதத்திற்கு எதிராக 1993 இல் 47 சதவீதத்திற்கு வகைகூறியது.

---

* இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 1.34

**மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியேற்றம்**
**('எச்,' 'சி,' 'பீ,' 'ஜி,' 'எல்' முறைகள்)**

குடும்பங்களின் எண்ணிக்கை

| ஆண்டு | முறை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 'எச்' | 'சி' | 'பீ' | 'ஜி' | 'எல்' | |
| 1976 ... ... | 2,383 | – | – | – | – | 2,383 |
| 1977 ... ... | 3,141 | – | – | – | – | 3,141 |
| 1978 ... ... | 2,754 | – | – | – | – | 2,754 |
| 1979 ... ... | 5,290 | – | – | – | – | 5,290 |
| 1980 ... ... | 7,407 | – | – | – | – | 7,407 |
| 1981 ... ... | 2,389 | 2,777 | – | – | – | 5,166 |
| 1982 ... ... | 1,449 | 2,683 | 1,918 | – | – | 6,050 |
| 1983 ... ... | 1,077 | 1,988 | 1,938 | 1,319 | – | 6,322 |
| 1984 ... ... | 1,956 | 1,992 | 1,381 | 446 | – | 5,775 |
| 1985 ... ... | 44 | 823 | 3,423 | 1,045 | – | 5,335 |
| 1986 ... ... | 780 | 2,151 | 1,260 | 583 | – | 4,774 |
| 1987 ... ... | 182 | 1,407 | 857 | 274 | – | 2,720 |
| 1988 ... ... | 14 | 1,081 | 656 | 85 | 3,270 | 5,106 |
| 1989 ... ... | 9 | 1,008 | 324 | 1,305 | 94 | 2,740 |
| 1990 ... ... | 1,680 | 3,427 | 3,492 | 366 | – | 8,965 |
| 1991 ... ... | 1,151 | 3,240 | 1,468 | 126 | – | 5,985 |
| 1992 ... ... | 754 | 2,005 | 1,716 | 6 | – | 4,481 |
| 1993 (அ) ... ... | 283 | 1,050 | 3,190 | – | – | 4,523 |
| மொத்தம் | 32,743 | 25,632 | 21,623 | 5,555 | 3,364 | 88,917 |

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை.

1992 இல் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த மகாவலி ஆளுமைப் பிரதேசத்தின் கீழான பயிர்ச் செய்கைப் பரப்பளவு 1993 இல் 123,055 எக்டேயர்களுக்கு 22 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1992/93 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு முன்னைய பெரும் போகத்துடன் ஒப்பிடுகையில் 75,011 எக்டேயர்களுக்கு 9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை 1992 இல் 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவு 1993 இல் 48,044 எக்டேயர்களுக்கு உயர்ந்து 52 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில், 1992 இல் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த நெற் செய்கையின் கீழான மொத்தப் பரப்பு 1993 இல் 102,346 எக்டேயர்களுக்கு 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

அட்டவணை 1.35

## மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1989/90 | சிறு போகம் 1990 | மொத்தம் 1990 | பெரும் போகம் 1990/91 | சிறு போகம் 1991 | மொத்தம் 1991 | பெரும் போகம் 1991/92 | சிறு போகம் 1992 | மொத்தம் 1992 | பெரும் போகம் 1992/93(அ) | சிறு போகம் 1993 (அ) | மொத்தம் 1993 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' | 30,362 | 10,874 | 41,236 | 31,385 | 19,806 | 51,191 | 31,931 | 4,312 | 36,243 | 33,390 | 11,660 | 45,050 |
| நெல் | 27,893 | 7,594 | 35,487 | 29,392 | 9,176 | 38,568 | 29,294 | 1,262 | 30,556 | 29,117 | 2,291 | 31,408 |
| ஏனைய பயிர்கள் | 2,469 | 3,280 | 5,749 | 1,993 | 10,630 | 12,623 | 2,637 | 3,050 | 5,687 | 4,273 | 9,369 | 13,642 |
| முறை 'பி' | 10,606 | 10,508 | 21,114 | 11,551 | 10,347 | 21,898 | 11,786 | 11,221 | 23,007 | 13,591 | 12,594 | 26,185 |
| நெல் | 10,207 | 9,721 | 19,928 | 10,912 | 9,837 | 20,749 | 11,175 | 10,624 | 21,799 | 12,513 | 11,956 | 24,469 |
| ஏனைய பயிர்கள் | 399 | 787 | 1,185 | 639 | 510 | 1,149 | 611 | 597 | 1,208 | 1,078 | 638 | 1,716 |
| முறை 'சி' | 17,374 | 14,718 | 32,092 | 19,026 | 15,687 | 34,713 | 18,599 | 15,934 | 34,533 | 21,521 | 19,976 | 41,497 |
| நெல் | 14,085 | 14,274 | 28,539 | 15,632 | 15,008 | 30,640 | 16,760 | 15,098 | 31,858 | 19,289 | 19,089 | 38,378 |
| ஏனைய பயிர்கள் | 3,289 | 444 | 3,733 | 3,394 | 679 | 4,073 | 1,839 | 836 | 2,675 | 2,232 | 887 | 3,119 |
| முறை 'ஜி' | 4,749 | 4,532 | 9,281 | 5,063 | 4,668 | 9,731 | 5,180 | 174 | 5,354 | 5,414 | 3,732 | 9,146 |
| நெல் | 4,546 | 2,702 | 7,248 | 5,017 | 2,613 | 7,630 | 4,959 | 117 | 5,076 | 5,096 | 2,269 | 7,365 |
| ஏனைய பயிர்கள் | 203 | 1,830 | 2,033 | 46 | 2,055 | 2,101 | 221 | 57 | 278 | 318 | 1,463 | 1,781 |
| முறை 'எல்' | 545 | 453 | 998 | 1,071 | 152 | 1,223 | 1,451 | 65 | 1,516 | 1,095 | 82 | 1,177 |
| நெல் | 346 | 137 | 483 | 700 | 84 | 784 | 824 | - | 824 | 684 | 42 | 726 |
| ஏனைய பயிர்கள் | 199 | 316 | 515 | 371 | 68 | 439 | 627 | 65 | 692 | 411 | 40 | 451 |
| மொத்தம் | 63,636 | 41,085 | 104,721 | 68,096 | 50,660 | 118,756 | 68,947 | 31,706 | 100,653 | 75,011 | 48,044 | 123,055 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை

முன்னைய ஆண்டில் 48 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏனைய பயிர்களின் கீழான பரப்பளவு 1993 இல் 20,709 எக்டேயர்களுக்கு அதிகரித்து 96 சதவீத உயர்வினைப் பதிவுசெய்தது.

1993 இல் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 4,523 ஆக இருந்தது. இதில் 71 சதவீதம் அல்லது 3,190 குடும்பங்கள் முறை 'பீ இல் குடியமர்த்தப்பட்ட வேளையில் 1,050 குடும்பங்களும் 283 குடும்பங்களும் முறையே முறைகள் 'சி" இலும் 'எச்" இலும் குடியமர்த்தப்பட்டன. 1993 இன் இறுதியில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 88,917 ஆக இருந்தது.

## ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி

முக்கிய நீர்ப்பாசன நடவடிக்கைகளான கிரிண்டிஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் - கட்டம் II, நில்வள கங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம், மினிப்பே நாகதீப நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டம், தேசிய நீர்ப்பாசன புத்தாக்க செயற்றிட்டம் மற்றும் வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் என்பன மீதான வேலைகள் 1993 இலும் தொடர்ந்தன. 1993 இல் மேலேயுள்ள செயற்றிட்டங்கள் மீதான மொத்தச் செலவினம் 1992 இல் ஏற்பட்ட ரூ. 4,070 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 3,930 இலட்சமாக விளங்கியது.

அட்டவணை 1.36

### தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு

| செயற்றிட்டம் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (பத்து இலட்சங்களில்) | 1992 இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.) | 1993* இன் செலவு (ரூ.ப.இ.) | 1993* இறுதி வரை ஒன்று சேர்ந்த செலவு (ரூ.ப.இ.) |
|---|---|---|---|---|---|
| 1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் I | ஆ.அ.வ.<br>கே.எப்.டபிள்யூ<br>வே.அ.ப.நி<br>வே.அ.ப.நி. | 30.0 (ஐ.அ. டொலர்)<br>43.5 (டி. மா)<br>5.5 (சி.எ.உ)<br>12.0 (ஐ.அ. டொலர்) | 61.0 | 2.7 | 1,884.5 |
| 2. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் II | ஆ.அ.வ. | 22.2 (சி.எ.உ.) | 101.4 | 119.7 | 631.7 |
| 3. நிலவளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் கட்டம் II | பிரான்சு | 200.0 (பி. பிராங்) | 5.58 | 5.1 | 149.6 |
| 4. மினிப்பே-நாகதீப நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் | யப்பான் | 1,295.0 (யென்) | 132.2 | 63.3 | 226.3 |
| 5. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் | பொ.பொ.ச | 340 (மா) | 56.3 | 62.2 | 124.0 |
| 6. தேசிய நீர்ப்சான புனர்வாழ்வு செயற்றிட்டம் (தே.நீ.பு.செ.) | ப.அ.அ<br>ஐ.பொ.ச. | 2,267.0 (ஐ.அ.பொ.)<br>1,200.0 (ஐ.அ.பொ.) | 51.0 | 140.4 | 191.4 |

மூலம் : நீர்ப்பாசனத் திணைக்களம்

* தற்காலிகம்.

அட்டவணை 1.37

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1992 – 1993

ரூபா பத்து இலட்சம்

| மாவட்டம்/செயற்றிட்டம் (ஆ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1992 முடிவில் உள்ளபடி (அ) | 1993 முடிவில் உள்ளபடி (இ) | 1992 ஆம் ஆண்டின் செலவு (அ) | 1993 ஆம் ஆண்டின் செலவு (இ) |
| 1. மாத்தறை | (1979) ... | சீடா | 497 | 55 | 552 | 375 | 440 | 67 | 65 |
| 2. அம்பாந்தோட்டை | (1979) ... | நோராட் | 980 | 20 | 1,000 | 769 | 833 | 84 | 65 |
| 3. நுவரெலியா | (1979) ... | நெதர்லாந்து | 578 | 14 | 592 | 447 | 480 | 57 | 33 |
| 4. பதுளை | (1981) ... | வே. அ. ப. நி./சீடா | 1,116 | 297 | 1,413 | 496 | 528 | 62 | 32 |
| 5. இரத்தினபுரி | (1984) ... | நெதர்லாந்து | 352 | 19 | 370 | 241 | 282 | 44 | 40 |
| 6. மொனறாகலை | (1984) ... | நோராட் | 588 | 12 | 600 | 376 | 443 | 76 | 67 |
| 7. கேகாலை | (1986) ... | வே. அ. ப. நி. | 314 | 176 | 490 | 321 | 400 | 67 | 79 |
| 8. களுத்துறை | (1987) ... | பினிடா (பின்லாந்து) | 397 | 70 | 467 | 371 | 405 | 55 | 34 |
| 9. கண்டி | (1987) ... | சேர்மன் தொ. வ. | 187 | 3 | 190 | 55 | 77 | 25 | 22 |
| 10. கம்பகா | (1989) ... | யப்பான் ப.கூ.மு. | 521 | 38 | 559 | 538 | 542 | 27 | 5 |
| 11. தெ. மா. கி. அ. செ. (ஈ) | (1991) ... | ஆ.அ.வ. | 1,520 | 400 | 1,920 | 42 | 112 | 31 | 71 |
| 12. அநுராதபுரம் | (1992) ... | சீடா | 146 | 16 | 162 | 9 | 30 | 8 | 21 |
| 13. புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை பணிகள் செயற்றிட்டம் | (1992) ... | யுனிசெப் | 106 | 53 | 159 | 27 | 46 | 27 | 19 |
| 14. உலர்வலயம் பங்கேற்கும் அபிவிருத்திச் செயற்றிட்டம் | (1993) ... | வே. அ. ப. நி/ சே. தொ. வ. | 571 | 274 | 845 | 0 | 29 | 0 | 29 |
| மொத்தம் | ... | | 7,872 | 1,447 | 9,319 | 4,067 | 4,649 | 631 | 582 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(இ) தற்காலிகமானவை.
(ஈ) தெ. மா. கி. அ. செ. – தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

மூலம் : கொள்கைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் அமைச்சு.

1993 இல் கிருண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் II இன் மீதான செலவினம் ரூ. 1,200 இலட்சமாக விளங்கியதன் மூலம் ஆண்டின் இறுதியில் மொத்தச் செலவினம் ரூ. 6,320 இலட்சமாகியது.

வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டத்தின் கீழ் நீலபேமா, துட்டநேறியா, நடவிபென்டிஎல திட்டங்களின் மீதான வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 620 இலட்சமாக இருந்தது. அத்துடன் இவ்வாண்டில் 17 மாவட்டங்களிலுள்ள 157 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்கிய தேசிய நீர்ப்பாசனப் புத்தாக்க செயற்றிட்டத்தின் மீது ரூ. 1,400 இலட்சம் செலவிடப்பட்டது.

நீர்ப்பாசன முறையின் ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் கீழ் 1993 இல் 246 வேளாண்மையாளர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் ஆண்டின் இறுதியில் அமைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 706 இற்கு உயர்ந்தது.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மையத்துடன் நன்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தியதன் வாயிலாக கிராமியப் பிரதேசங்களையும் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் தொடர்ந்து முன்னேற்றிவருகிறது.

தற்பொழுது ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 14 மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. ஒரு புதிய ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டமான வரண்டவலய பங்கேற்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் வே. அ. ப. வங்கி / ஜீரீஇசட் நிதியுடன் 1993 இல் தொடங்கப்பட்டது. 1993 இல் ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவு 1992 இன் ரூ. 6,310 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 5,810 இலட்சமாக விளங்கியது.